TIST இந்தியா செய்திமடல் பிப்ரவரி 2024 விற்பனைக்கு இல்லை

# செழுமை

The International Small Group & Tree Planting Program
www.tist.org

TIST என்பது விவசாயிகளால் வழிநடத்தப்படும் ஒரு புதுமையான மற்றும் நெடுங்கால ஆராயப்பட்ட காடு வளர்ப்புத் திட்டமாகும்

## TIST பற்றி

'தி இன்டர்நேஷனல் ஸ்மால் குரூப் அண்ட் ட்ரீ பிளான்ட்டிங் ப்ரோக்ராம்' (TIST) 1999 இல் தான்சானியாவில் 'கிளீன் ஏர் ஆக்ஷன் கார்ப்பரேஷன்' (CAAC), அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனம் மற்றும் 'இன்ஸ்டிடியூட் பார் என்விரான்மென்டல் இன்னோவேஷன்' (I4EI) மூலம் வாழ்வாதார விவசாயிகளுக்கு ஆதரவாக நிலையான மேம்பாடு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் கல்வி ஆகியவற்றில் பணியாற்ற தொடங்கப்பட்டது. அதன்பிறகு, இந்தியா, கென்யா மற்றும் உகாண்டா உள்ளிட்ட பிற நாடுகளில் வேலை செய்ய TIST விரிவடைந்தது. இந்தியாவில் வேலை தமிழ்நாட்டை மையமாகக் கொண்டு 2003 இல் தொடங்கப்பட்டது. 6 முதல் 12 உறுப்பினர்களைக் கொண்ட சிறு குழுக்கள் (SG) மூலம் விவசாயிகளுடன் TIST வேலை செய்கிறது. அவர்கள் சுற்றுச்சூழலுக்கு நன்மை பயக்கும் வகையில், தங்கள் வயல்களில் மரங்களை நட்டு, பிற நடவடிக்கைகள் மூலம் உள்ளூர் சூழலையும் மற்றும் உலகின் காலநிலையையும் பெருமளவில் மேம்படுத்த உதவுகின்றனர்.

கார்பன் கடன் வணிகத்தில் விவசாயிகள் பங்கேற்க CAAC உதவுகிறது. கார்பன் கிரெடிட் விற்பனை மூலம் கிடைக்கும் லாபத்தில் 70% பங்கை விவசாயிகள் பெறுகின்றனர். மரங்களை நட்டு அவற்றை நீண்ட காலம் உயிர்ப்புடன் வைத்து, கார்பன் கிரெடிட் வணிகத்தில் பங்கேற்பதன் மூலம் லாபம் உருவாக்கப்படுகிறது.

இன்று, இந்தியா, தான்சானியா, கென்யா மற்றும் உகாண்டாவில் உள்ள 1,76,995 TIST விவசாயிகள் வெற்றிகரமாக மரங்களை நடுவது மட்டுமல்லாமல், உயிரிபல்வகைமையைப் பாதுகாக்கவும், காலநிலை மாற்றங்களைத் தணிக்கவும், விவசாய நுட்பங்களைப் பின்பற்றி, தற்போதைய சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ள உதவுகிறார்கள். மேலும், சிறு குழுக்களில் அவர்கள் தலைமைத்துவ தரத்தை வளர்த்து, அவர்களின் வருமானம், சுகாதாரம் மற்றும் உள்ளூர் சூழலை மேம்படுத்துகின்றனர். எங்கள் விவசாயிகள், தங்கள் விவசாய நிலங்களில் கிட்டத்தட்ட 2,30,00,000 மரங்களை வளர்த்து வருவதில் TIST பெருமிதம் கொள்கிறது.

TIST கொள்கைகள்

ஜனவரி இதழில் நாங்கள் குறிப்பிட்டது போல, எங்கள் பணிகளை வழிநடத்த உதவும் பல கொள்கைகளை TIST கொண்டுள்ளது. மேலே பட்டியலிடப்பட்டுள்ள TIST மதிப்புகளுக்கு கூடுதலாக, பாதுகாப்பு, பாலியல் துன்புறுத்தல், பாரபட்சமற்ற தன்மை, குறைகள் மற்றும் பாலினம் ஆகியவற்றில் எங்களிடம் கொள்கைகள் உள்ளன என்பதை எங்கள் விவசாயிகள் தெரிந்திருக்க வேண்டும். மொபைல் போன் வைத்திருப்பவர்கள், அவற்றை TIST மொபைல் தளத்தில் https://www.tist.org/mobile/secure/login.php இல் காண ஒரு உள்நுழைவு தேவை. இந்த இதழில் நாங்கள் எங்கள் கொள்கைகளில் ஒன்றான பாரபட்சமற்ற கொள்கையை சுருக்கமாகக் கூறுகிறோம் (நீங்கள் முழுப் பதிப்பையும் இணையதளத்தில் படிக்கலாம்).

## TIST மதிப்புகள்

TIST இல், எங்கள் எல்லா அணுகுமுறை களிலும் இந்த மதிப்புகளைப் பின்பற்றுகிறோம் –

- நாங்கள் நேர்மையானவர்கள்
- நாங்கள் துல்லியமானவர்கள்
- நாங்கள் வெளிப்படைத் தன்மையுடையவர்கள்
- நாங்கள் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்பவர்கள்
- நாங்கள் பரஸ்பரம் பொறுப்பாளிகள்
- நாங்கள் குறைந்த தொகையில் பெரிய பலன்களை உருவாக்குகிறோம்

இனம், நிறம், மதம் (சமயம்), பாலினம், பாலின வெளிப்பாடு, வயது, தேசிய தோற்றம் (பூர்வீகம்), இயலாமை, திருமண நிலை அல்லது பாலின நோக்குநிலை ஆகியவற்றின் அடிப்படையில் TIST, அதன் செயல்முறைகள் அல்லது நடவடிக்கைகளில் பாகுபாடு காட்டாது. எங்கள் அனைத்து பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், தன்னார்வலர்கள், துணை ஒப்பந்ததாரர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு உள்ளடக்கிய மற்றும் வரவேற்கத்தக்க சூழலை வழங்குவதற்கு TIST உறுதிபூண்டுள்ளது. நாங்கள் ஒரு சம வாய்ப்பு முதலாளி.

### TIST இந்தியா 4வது சரிபார்ப்பை நாடுகிறது

நாங்கள் ஜனவரி இதழில் விரிவாகக் கூறியது போல், கார்பன் கிரெடிட்களைப் பெறுவதற்கான 4வது சரிபார்ப்பைத் தொடங்கியுள்ளோம். சரிபார்ப்பைப் பெற, காலநிலை, சமூகம் மற்றும் உயிரிபல்வகைமை பெருக்கத்திற்கு TIST நன்மை பயக்கும் என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். CAAC வெர்ராவிற்கு (கார்பன் வரவு அமைப்புகளை நிர்வகிக்கும் நிறுவனம் - சரிபார்க்கப்பட்ட கார்பன் தரநிலைகள் - VCS மற்றும் காலநிலை, சமூகம் மற்றும் உயிரிபல்வகைமை தரநிலைகள் - CCB) மற்றும் EPIC சஸ்டைனபிளிட்டி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், ஒரு காலநிலை, சமூகம் மற்றும் உயிரிபல்வகைமை கூட்டமைப்பு (CCBA) சான்றளிக்கப்பட்ட தணிக்கையாளர் ஆகியவற்றிற்கு ஒரு கண்காணிப்பு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. கண்காணிப்பு காலம் 16 மார்ச் 2021 முதல் 15 அக்டோபர் 2023 வரை.

**பங்குதாரர்களிடமிருந்து கருத்துகளைப் பெறுவதற்காக நடத்தப்பட்ட பொதுக் கூட்டம்**

காலநிலை, சமூகம் மற்றும் உயிரிபல்வகைமை கூட்டமைப்பு (CCBA) தரநிலைகளின் கீழ் – மறுமதிப்பீடு மற்றும் சரிபார்ப்பதற்கு, TIST ஆரம்ப படிகளில் ஒன்றாக, பொதுக் கூட்டத்தின் பங்குதாரர்களுக்கு எங்கள் நோக்கத்தை நாங்கள் தெரிவிப்பதற்காக, 24 ஜனவரி 2024 இதழ்களில் 'தி இந்து' (ஆங்கிலம்) மற்றும் 'தினத்தந்தி' (தமிழ்) நாளிதழ்களில் விளம்பரம் செய்தோம்.

உங்களில் பலர் தீவிரமாகப் பங்கேற்றது மற்றும் அறிந்தது போல், 31 ஜனவரி 2024 அன்று, பாண்டுரங்கன் ரெசிடென்சி, வேலூர் மெயின் ரோடு, திருவண்ணாமலையில் TIST மற்றும் CAAC பொதுக்கூட்டத்தை நடத்தியது.

TIST சிறு குழு விவசாயிகள் உட்பட, 147 க்கும் மேற்பட்ட பங்குதாரர்கள் இந்த பொது கூட்டத்தில் கலந்து கொண்டனர் என்பதை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம். மண், வேளாண்மை, வனத்துறைகள் போன்ற அரசு துறைகளின் அதிகாரிகளும் மற்றும் பிற ஆர்வமுள்ள நபர்களும் இந்த பொது கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எங்கள் சிறு குழு விவசாயிகள், TIST பணியாளர்கள் மற்றும் பிற நிபுணர்களிடம் கார்பன்-டை-ஆக்சைடை எவ்வாறு துல்லியமாக அளவிடுவது, வளரும் இனங்கள் மற்றும் வளரும் நுட்பங்கள், பூச்சிகள் மற்றும் நோய்களைச் சமாளிப்பதற்கான வழிகள், ஊக்கத்தொகை செலுத்துதல், பல்வேறு பாரம்பரிய மர இனங்களை நடுவதன் அவசியம், காலநிலை மாற்றத்தில் மரங்களின் பங்கு மற்றும் மண் ஆரோக்கியம், மரங்கள் மூலம் பல வருமான ஆதாரங்கள், GHG உடன்படிக்கையை தமிழில் மொழிபெயர்த்தல், முனை சந்திப்பு, அரசு துறைகளின் கூடுதல் ஆராய்ச்சி மற்றும் ஆதரவு தேவை போன்ற பல கேள்விகளைக் கேட்டு அறிய அவர்கள் ஆர்வமாக இருந்தனர்.

விவசாயிகள் தங்கள் கிராமங்களில் அவர்களுடன் இணைந்து பணியாற்றியதற்காகவும் மற்றும் கூட்டத்திற்கு அழைத்து ஆதரவளித்ததற்காகவும் TIST க்கு தங்கள் நன்றியை பதிவு செய்தனர், இது அவர்களின் பணியை TIST மதிக்கிறது என்பதை விவசாயிகள் உணர்ந்தனர். மேலும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளையும் TIST பாராட்டுகிறது.

**அடுத்த மாதம் எங்கள் பணியின் கவனம்**

எங்கள் நண்பர்கள் மற்றும் சகாக்கள் மார்ட்டின் வெரு (TIST கென்யாவிலிருந்து) மற்றும் ஹக்கீம் பச்வா (TIST உகாண்டாவிலிருந்து) TIST இந்தியாவிற்கு வருவதை நாங்கள் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறோம். TIST மற்றும் விவசாயிகளுடன் பணிபுரிந்த அவர்களின் அனுபவத்தின் மூலம், நாம் கற்றுக்கொள்ளக்கூடிய சிறு குழுக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அவர்களின் நாடுகளில் பின்பற்றப்பட்ட சிறந்த நடைமுறைகளில் அவர்கள் எங்களுக்கு வழிகாட்டுவார்கள். மேலும், அவர்களும் நமது விவசாயிகளை சந்தித்து கற்றுக்கொள்வார்கள் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். மேலும், CAAC, USஐச் சேர்ந்த சுசான் ஹோல்பெர்க் எங்களுடன் சில வாரங்கள் செலவிடுவார். சிறு குழுக்களின் முனை

கூட்டங்களில் உங்களில் பலரை சந்திக்க அவர்கள் பயணம் செய்து உங்கள் தோப்புகளை பார்வையிடுவார்கள். சிறு குழுக்கள், அளவீடு, தலைமைத்துவம், தரவு உள்ளீட்டின் தொழில்நுட்ப அம்சங்கள், கார்பன் வரவுகள், போன்ற பல அம்சங்களிலும் அவர்கள் TIST இந்தியாவுக்கு மேலும் வழிகாட்டுவார்கள். மூவரையும் இந்தியாவுக்கு வரவேற்க நாங்கள் காத்திருக்கிறோம்.

மாதத்தின் பிற்பகுதியில், TIST இந்தியாவின் சிறு குழுக்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில தோப்புகளை, EPIC சஸ்டெயினபிலிட்டி (சரிபார்ப்பு அமைப்பு), TIST நாடுகின்ற VCS மற்றும் CCB தரநிலைக்கான பணியைத் தொடங்கும்.

**களத்தில் இருந்து கதை**

SG 2021IN170, திருத்தணி முனையிலிருந்து விவசாயி ஏழுமலை (கட்டுரை வரைவு பார்த்திபன், ஆடிட்டர் மற்றும் கிளஸ்டர் சேவகர்)



என் பெயர் ஏழுமலை, நான் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், தும்பிக்குளம் கிராமத்தில் வசிக்கும் விவசாயி. பல்வேறு மர இனங்களை வளர்ப்பதில் எனக்கு எப்போதும் விருப்பம் இருந்தது. எங்கள் சிறு குழு 2021IN170 மூலம் நான் TIST இல் சேர்ந்தபோது, பல்வேறு மர இனங்கள் மற்றும் மரங்களுக்கு இடையில் ஊடுபயிர்களை பயிரிட மேலும் ஊக்கம் பெற்றேன். இது எனது வருமான ஆதாரத்தை பன்முகப்படுத்துவது மட்டுமல்லாமல், மண்ணின் ஆரோக்கியம் மற்றும் உயிரி பல்வகைமை பெருக்கத்திற்கும் உதவியது. எனது மூன்று ஏக்கர் விவசாய நிலத்தில் 1100 அத்தி மரங்களை (*Ficus glomerata* - Fig) வளர்த்துள்ளேன். ரசாயன பூச்சிக்கொல்லிகளுக்குப் பதிலாக, நான், பயன்படுத்திய பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்களை வாங்கினேன், அவற்றைப் பாதியாக வெட்டி, அனைத்து பழ முனைகளிலும் கட்டினேன். இதன் மூலம், எனது உற்பத்தித்திறனை அதிகரித்து, லாபம் ஈட்ட முடிந்தது. ரோஜா, மல்லிகை போன்ற பூ வகைகளையும் ஊடுபயிராக வளர்க்கிறேன். வியாபாரிகள் எனது பண்ணைக்கே வந்து பூக்களை வாங்குவதால் சந்தைப்படுத்துவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனவே, எனது பழ மரங்கள் மற்றும் மலர் செடிகள் மூலம் எனக்கு எப்போதும் ஒன்று அல்லது மற்றொன்று உறுதியான வருமானம் கிடைக்கிறது.

**Newsletter February 2024** ***Not for Sale***

# CHEZHUMAI

tist
The International Small Group & Tree Planting Program
www.tist.org

TIST is an Innovative, time-tested, afforestation program led by the farmers

## About TIST

'The International Small Group and Tree Planting Program' (TIST) was initiated in 1999 in Tanzania to support subsistence farmers by the 'Clean Air Action Corporation'(CAAC), a US-based company, and the 'Institute for Environmental Innovation' (I4EI) to work on sustainable development, health, and environmental education. Subsequently, TIST expanded to work in other countries including India, Kenya, and Uganda. The work in India was initiated in 2003, focussing on Tamil Nadu. TIST works with farmers through form Small Groups (SG) consisting of 6 to 12 members who plant trees on their fields and undertake other environmentally beneficial steps to help improve the local environment and the world's climate at large.

CAAC helps farmers participate in the carbon credit business. Farmers receive a 70% share of the profits from the sales of carbon credit. Profits are created through participating in the carbon business, which involves planting trees and keeping them alive for a long time.

Today, over 1,76,995 TIST farmers in India, Tanzania, Kenya and Uganda, are successfully not just planting trees but also help protect biodiversity and mitigate climate changes, adapting farming techniques to meet current environmental challenges. Further, in the Small Groups they also develop leadership quality and improve their income, health and local environment. TIST is proud that our farmers are nurturing nearly 2,30,00,000 trees live over their farmlands.

## TIST Policies

As we mentioned in the January issue, TIST has a series of policies that helps us guide our work. In addition to the TIST values listed above we want our farmers to be aware that we have policies on Safety, Sexual Harassment, Non-Discrimination, Grievances and Gender. For those with a mobile phone, they can be found on the TIST Mobile site at https://www.tist.org/mobile/secure/login.php and login is required. Here we are summarising one of the policies – the Non-Discrimination Policy (you can read the full version on the website).

TIST does not discriminate on the basis of race, color, religion (creed), gender, gender expression, age, national origin (ancestry), disability, marital status, or sexual orientation, in any of its activities or operations. And TIST is committed to providing an inclusive and welcoming environment for all members of our staff, clients, volunteers, subcontractors, and vendors. We are an equal opportunity employer.

**On TIST India Seeking 4th Verification**

Further as we elaborated previously in the January issue, we have begun our 4th verification to earn carbon credits. To receive the verification, we must demonstrate that TIST is beneficial to climate, community and biodiversity. CAAC has submitted a Monitoring Report to Verra (the entity that manages the carbon crediting systems - Verified Carbon Standards - VCS and the Climate, Community, and Biodiversity standards- CCB) and to EPIC Sustainability Services Pvt. Ltd. (Epic), a Climate, Community and Biodiversity Alliance (CCBA) certified auditor. The monitoring period is 16 March 2021 to 15 October 2023.

## TIST VALUES

At TIST, the following values are our guidance in all our approaches -

- We are HONEST
- We are ACCURATE
- We are TRANSPARENT
- We are SERVANTS TO EACH OTHER
- We are MUTUALLY ACCOUNTABLE
- We CREATE BIG RESULTS WITH LOW BUDGET

**Public Meeting held to receive comments from Stakeholders**

As one of the early few steps to announce our intent to re-validate and verify - The International Small Group and Tree Planting Program (TIST) under the Climate, Community and Biodiversity Alliance (CCBA) standards, we informed the stakeholders of the public meeting by advertising in ‘The Hindu’ (English) and ‘Dinathanthi’ (Tamil) newspapers in the 24th January 2024 issues.

As many of you actively participated and know, the public meeting was held on 31st January 2024 at Pandurangan Residency, Vellore Main Road, Tiruvannamalai by TIST Tree Planting India Private Limited and Clean Air Action Corporation (CAAC).

We are happy to share that we had over 147 stakeholders apart from the farmers in the TIST Small Groups, we also saw officials from government departments like Soil, Agriculture, Forest Departments and other interested individuals marking their presence in the event.

Our SG farmers asked a number of questions to the TIST staff and other experts. They were curious to know how exactly we can measure carbon-di-oxide, the kind of species to grow and growing techniques, ways to tackle pests and diseases, payment of incentives, need of planting various indigenous species, role of trees for climate change and soil health, multiple sources of income through trees, translation of GHG agreement in Tamil, node meeting, need for more research and support from government departments etc.

The farmers also recorded their gratitude towards TIST for working with them in their villages and also for supporting their participation in the meeting, indicating to them that their work is valued. And we definitely appreciate all our farmers including those who could not attend the public meeting.

**Our focus for the next month**

We are happy to share that our friends and colleagues Martin Weru (TIST Kenya) and Hakim Bachwa (TIST Uganda) are visiting TIST India. With their rich experience of working in TIST and with farmers, they will ably guide us in the best practices adopted in their countries to work with Small Groups that we can learn from. And we are sure that they will also observe and learn from our farmers. Moreover, Ms. Suzanne Holmberg of CAAC, US will also spend few weeks with us. They will be travelling to meet many of you in Node meetings of the Small Groups and visiting your groves. They will also guide TIST India on many aspects of Small Groups, quantification, leadership, technical aspects of data input, carbon credits, We are looking forward to welcome all three to India.

Later on in the month, few selected groves from the TIST Small Groups will be visited by the validation body -EPIC Sustainability to check on the work of TIST India towards the VCS and CCB standards that TIST is seeking.

**Story from the Field**

**Farmer Elumalai from SG 2021IN170, Tirutani Node**

**(Article drafted by Parthiban, Auditor and CS)**

I am Elumalai, a farmer residing in Thumbikulam village, Tirutani Block in Thiruvallur district. I always had an inclination to grow different species. And when I joined TIST through our Small Group 2021IN170, I was further encouraged to cultivate different species and intercropping between trees. It helped me not just to diversify my source of income but also support for soil health and biodiversity. I grew 1100 *Atthi* trees (*Ficus glomerata* - Fig) on three acres of my farmland. Instead of going in for chemical pesticides, I purchased used plastic water bottles, cut them in halves and tied on all the fruiting tips. This way, I could increase my productivity and hence profit. I also grow flower species like rose and jasmine as intercrops. I do not have any issues with marketing as traders come to my farm gate and buy my flowers. So, I always have one or the other assured income from my fruit trees and flower shrubs.

## 31 ஜனவரி 2024 அன்று திருவண்ணாமலை பாண்டுரங்கன் ரெசிடென்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் காட்சிகள்

## GLIMPSES OF THE PUBLIC MEETING HELD ON 31ST JANUARY 2024 AT PANDURANGAN RESIDENCY, TIRUVANNAMALAI









